# பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

மதுரைரோடு, பேகம்பூர், திண்டுக்கல் - 624002.


## கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கல்லூரி மாணவிகளுக்கான போட்டிகள்

**(பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, வினாடி வினா, பட்டிமன்றம்)**

நாள் : 04.08.2023 இடம் : கல்லூரி கலையரங்கம்

கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 04.08.2023 அன்று காலை 10.00 மணியளவில் கல்லூரி கலையரங்கத்தில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, வினாடி வினா, பட்டிமன்றம் முதலான போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகள் கல்லூரி துணை முதல்வர் அருட்சகோதரி அமலிபுஷ்பம் அவர்கள் முன்னிலையில் தொடங்கப்பட்டது.

பேச்சுப்போட்டியில் 15 மாணவிகள் பங்கேற்றனர். முதலாமாண்டு வேதியியல் துறை ம.ஆரோக்கிய விண்ணரசி முதல் இடமும், முதலாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறை அ.ஆயிஷா இர்பானா இரண்டாம் இடமும், முதலாமாண்டு வணிகவியல் அ.காஜிராபானு மூன்றாம் இடமும் பெற்றனர். தமிழ்த்துறை தலைவர், உதவிப்பேராசிரியர் முனைவர் ஆ.ஜோஸ்பின் செலின் மேரி அவர்களும், ஆங்கிலத்துறை தலைவர், உதவிப்பேராசிரியர் மு.வெண்ணிலா அவர்களும் இப்பேச்சுப்போட்டிக்கு நடுவர்களாக திகழ்ந்தனர்.









## கட்டுரைப்போட்டி

கட்டுரைப்போட்டியில் 91 மாணவிகள் பங்கேற்றனர். மூன்றாமாண்டு வேதியியல் துறை ஜோ.ஷர்மிளா மேரி முதல் இடமும், இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை வீ.பாக்கியலட்சுமி இரண்டாம் இடமும், இரண்டாமாண்டு கணிதவியல் ரா.யோகவர்ஷினி மூன்றாம் இடமும் பெற்றனர். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் ஆ.ஜீலி மேரி, வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் சா.பர்கத் பேகம் ஆகியோர் நடுவர்களாக திகழ்ந்தனர்.







## கவிதைப்போட்டி

கவிதைப்போட்டியில் 66 மாணவிகள் பங்கேற்றனர். **மூன்றாமாண்டு கணிதவியல் துறை மு.ஜைனஃப் பேகம் முதல் இடமும், இரண்டாமாண்டு கணிதவியல் துறை து.அனாடெரன்சியா இரண்டாம் இடமும், இரண்டாமாண்டு வணிகவியல் துறை அ.அஜீதா மூன்றாம் இடமும் பெற்றனர்.** தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் திருமதி.லில்லி புஷ்பம் உமா அவர்களும் மற்றும் வேதியியல் துறை உதவிப்பேராசிரியர் து.பிரியதர்ஷினி அவர்களும் இக்கவிதைப்போட்டிக்கு நடுவர்களாக திகழ்ந்தனர்.






# பட்டிமன்றம்

பட்டிமன்றம் குழுவிற்கு 3 மாணவிகள் வீதம் 6 மாணவிகள் பங்கேற்றனர். **இரண்டாமாண்டு வணிக மற்றும் கணினி பயன்பாட்டியல் துறை ர.யோகேஸ்வரி முதல் இடமும், இரண்டாமாண்டு ஆங்கிலம் அ.ரபேக்கா இரண்டாம் இடமும், இரண்டாமாண்டு கணிதவியல் து.அனா டெரன்சியா மூன்றாம் இடமும் பெற்றனர்.** தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் ஆ.ஜீலி மேரி மற்றும் கணினி அறிவியல் துறை உதவிப்பேராசிரியர் கௌஸ்பி அவர்களும் இப்பட்டிமன்றத்திற்கு நடுவர்களாக திகழ்ந்தனர்.







## வினாடி வினா போட்டி

வினாடி வினா போட்டியில் குழுவிற்கு 2 மாணவிகள் வீதம் 5 குழுக்களாக மாணவிகள் இப்போட்டியில் பங்கேற்றனர். **மூன்றாமாண்டு வேதியியல் துறை நா.மிருதுலா, க.ஸ்ரீ.தனலெட்சுமி, முதலாமாண்டு கணினி அறிவியல் துறை டே.ரியானா ரெஜிஸ் ஆகியோர் முதல் இடமும், இரண்டாமாண்டு கணிதவியல் ரா.யோகவர்ஷினி முதல் இடமும், முதுகலை இரண்டாமாண்டு வணிகவியல் துறை ச.சர்மிளா மரிய ஜென்ஸி, ம.ஜோஸ்பின் சௌமியா ஆகியோர் இரண்டாம் இடமும் பெற்றனர்.** தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் ப.லில்லி புஷ்பம் உமா மற்றும் ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சாஜிதா அவர்களும் இப்போட்டிக்கு நடுவர்களாக திகழ்ந்தனர்.







BON SECOURS ARTS AND SCIENCE COLLEGE FOR WOMEN